## வனாதவில்லுவ பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 11 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வனாதவில்லுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 97,920 இற்கான 720 லீற்றர் எரிபொருள் இறுதி இருப்புக்களின் கிரயக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனத் தன்மையுள்ள வாகனங்களில் துணைக் கருவிகள் பொருத்துதல் செலவு ரூபா 200,420 தொகையினை மீண்டுவரும் செலவு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட இரண்டு கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை மற்றும் தொடர்புடைய பட்டோலைகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 750,561 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 20,197,189 தொகை மற்றும் ரூபா 18,566,745 தொகையுமாகும். அவற்றில் ஒரு வருடத்தை விட மிகைத்த பெற வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 4,123,901 ஆக காணப்பட்டதுடன் 03 வருடங்களை மிகைத்த கடன்கொடுத்தோர் ரூபா 181,985 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 76,282,827 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 129(2)(அ) மற்றும் (ஊ) மற்றும் 158 இன் பிரகாரம் முறையே சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை முறைப்படி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் வீத வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தத் தவறுபவர்களின் அசையும் சொத்துக்களை தடைசெய்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 மே 13 திகதி இலக்கம் 5/3 கொண்ட அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் காலங்கடந்த திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களில் காணப்பட்ட ரூபா 21,012,477 இற்கான பெறுமதியினை வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,933,782 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,932,201 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 31,185,147 உம் மற்றும் ரூபா 22,025,989 இற்கான மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 48,132,359 உம் மற்றும் ரூபா 20,576,094 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் அப்பற்றாக்குறை முறையே ரூபா 14,013,430

உம் மற்றும் ரூபா 482,306 உம் ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,531,124 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக செயலாளர் சமர்ப்பித்திருந்த வருமானம் சேகரித்தல் பற்றிய செயலாற்றுகை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | வீதவரி | 710 | 692 | 1,133 |
| (ஆ) | வாடகை | 2,727 | 2,542 | 431 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 214 | 214 | - |
| (ஈ) | சேவைக் கட்டணம் | 575 | 575 | - |
| (உ) | எழுத்தாணை மற்றும் தண்டப்பணம் | 2,386 | 1,059 | 2,106 |
| (ஊ) | ஏனைய வருமானங்கள் | 2,570 | 1,507 | 3,926 |

2.2.2 வீத வரி மற்றும் ஏனைய வரிகள்

---------------------------------------------------------

வீத வரி, ஏக்கர் வரி மற்றும் நீர் வரி 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 1,133,072 ஆக காணப்பட்டதுடன் 05 வருட காலத்தை மிகைத்துள்ள வீத வரி மற்றும் ஏக்கர் வரி ஆகியவற்றின் நிலுவை அவ் வரிகளின் நூற்றிற்கு 42 சதவீதமொன்றினை கொண்டிருந்தது. அதே போல் 2014 நீர் வரி அறவீடுகளின் சதவீதமும் பலவின நிலைமை ஒன்றில் காணப்பட்டது.

2.2.3 குத்தகை, வாடகை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------------------------------

நிலுவை குத்தகை ரூபா 10,250 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 2,750 தொகை 1 வருடம் மற்றும் 2 வருட கால வீச்சில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் ரூபா 7,500 தொகை 3 வருடம் மற்றும் 5 வருட காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டது. நிலுவை கடை வாடகை ரூபா 420,943 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 67,019 தொகை 1 வருடம் முதல் 3 இற்கு இடைப்பட்ட காலவீச்சு முதல் காணப்பட்டது.

2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

நீதிவான் நீதிமன்று ஒன்றில் இருந்து வடமேல் மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 2,106,413 இற்கான நீதிமன்றத் தண்டப் பணத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதான செயலாளரிடம் பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

சபையின் நிறைவேற்று தர பதவி ஒன்றில் மற்றும் இரண்டாம் தரத்தில் 07 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன், ஆரம்ப தர பதவி ஒன்றில் மிகையாக காணப்பட்டது. பதவியணியில் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக அமைய அடிப்படையில் 07 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 676,000 பெறுமதியான 10 சொத்து விடயங்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்படாமலும் காணப்பட்டது.

3.3 இணங்காணப்பட்ட நட்டங்கள்

----------------------------------------------

வனாத்தவில்லுவ மற்றும் காரைத்தீவு பொது நூல் நிலையங்களில் ரூபா 233,342 தொகை பெறுமதியான 1516 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன் அவற்றின் பெறுமதியினை அவற்றிற்கு பொறுப்பாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.4 பாதீட்டு கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டவை ரூபா 78,425,000 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 48,132,000 ஆக காணப்பட்டிருந்தமையால் அம் முரண் நூற்றிற்கு 38 ஐ நெருங்கிய பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்